# வனப்புமிக்க தேசம்
# அழகான வாழ்க்கை

நீங்களும் நாங்களும் பிறந்த எம் தாய்நாடும் இந்நாட்டு மக்களும் நிகழ்காலத்தில் அனுபவித்து வருகின்ற கவலைக்குரிய தலைவிதியை அடைந்திருக்ககூடாதென நாங்கள் நினைக்கிறோம்.

எமது நாடு இந்து சமுத்திரத்தின் வர்த்தக மற்றும் கப்பற்றுறை மத்தியநிலையத்தில் அமைந்துள்ள மனங்கவர் தீவாகும். நாங்கள் உலகத்திடம் பிச்சையேந்தவேண்டிய ஒரு நாடல்ல. எமது நாட்டில் இயற்கை வளங்கள் நிறைந்துள்ளன. நாட்டைச் சூழவுள்ள பெருங்கடல் வளங்களில் சுரங்கமாகும். எம்மிடம் பல கனிய வளங்கள் இருக்கின்றன. எமது காரீயம், புல்மோட்டை கனியமணல் படிவு மற்றும் எப்பாவல பொஸ்பேற் படிவம் மிகவும் பெறுமதியான வளங்களாகும்.

விவசாயத்தை நோக்கினால் எமது நாடு அதற்குப் பொருத்தமான மண்ணும் நிலமும் உள்ள நாடாகும். எமக்கு முற்காலத்தில் இருந்து மரபுரிமையாகக் கிடைத்த பாரிய நீர்ப்பாசன முறைமை உண்டு. திறமையான கல்விபயின்ற ஆற்றல் படைத்த மனித வளமும் எம்மிடம் இருக்கின்றது.

எமது நாடு மிகப்பண்டைய நாகரிகத்தை மரிபுரிமையாகக்கொண்ட நீண்ட வரலாற்றுக்கு உரிமை பாராட்டுகின்ற நாடாகும். எமது நாட்டில் முற்காலத்தில் பாரிய குளங்களை உள்ளிட்ட வியத்தகு நிர்மாணிப்புகளை எவரிடமும் கையேந்தாமலேயே செய்துள்ளார்கள். அவ்வாறு இருக்கையில் எமது நாடு வறுமைநிலைக்கு வீழ்ந்திருப்பின் அந்த தவறு நாட்டினதோ அல்லது மக்களினதோ அல்ல.

எனவே இந்த வனப்புமிக்க நாட்டினை முன்னேற்றமடைந்த நாடாக கட்டியெழுப்ப வேண்டுமல்லவா? இந்நாட்டு மக்கள் மகிழ்ச்யுடன் சிரித்து ஒற்றுமையாக வாழ்வதைக் காண்பது எம்மனைவரினதும் பிரார்த்தனையல்லவா? எதிர்கால சந்ததியினருக்காக வனப்புமிக்க தேசத்தையும் - அழகான வாழ்க்கையையும் நிர்மாணிப்போம். அதன்பொருட்டு நிலவுகின்ற நெருக்கடிகளை விளங்கிக்கொண்டு புதிய பாதையில் ஒன்றுசேர்வோம்.

**அதற்காகவே இந்த அழைப்பு.**

**மக்கள் விடுதலை முன்னணி**

எமது நாடும் எமது நாட்டு மக்களும் இன்றளவில் அழிவுமிக்க பல நெருக்கடிகளை எதிர்நோக்கி உள்ளார்கள். நாட்டின் பொருளாதாரம் சீர்குலைந்து, கடன் சுமையால் நசுங்கி, நாடு பிச்சையேந்துகின்ற நிலையை அடைந்துள்ளது.

இந்நாட்டு மக்கள் அன்றாட வாழ்க்கையைப் பேணிவர முடியாமல் இன்னல்களையும் வேதனைகளையும் அனுபவித்து வருகிறார்கள். வாழ்க்கை பற்றிய, எதிர்காலம் பற்றிய அனைத்துவிதமான எதிர்பார்ப்புகளும் சிதைந்துவிட்டன. நாமனைவரும் இதனைத்தான் அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். எமது நாடு ஏன் இவ்வாறான கவலைக்குரிய நிலையை அடைந்தது? நாங்கள் இப்போது சிந்தித்துப் பார்க்கவேண்டிய விடயம் இதுதான்.

## தவறு எவருடையது?

கடந்த 73 வருடங்கள் பூராவிலும் இந்நாட்டின் வாக்களிக்கின்ற மக்களில் பெரும்பாலானவர்கள் நேர்மையான, சாதகமான பொது நோக்கத்துடனேயே அரசாங்கத்தை அமைப்பதற்காக வாக்குகளை அளித்தார்கள்: அதற்காக பாடுபட்டார்கள். அதாவது நாட்டை சரிக்கட்டுகின்ற நோக்கத்துடனாகும். எனினும் இவ்வளவுகாலமும் அதிகாரத்திற்கு வந்த அரசியல் குழுக்களே வாக்காளர்களின் மேற்படி சாதகமான எதிர்பார்ப்புகளை சிதைத்து, கொடுத்த வாக்குறுதிகளை மீறி, நாட்டை அழிவுப் பாதையில் இட்டுச்சென்றுள்ளன.

கடந்த சனாதிபதி தேர்தலிலும் பொதுத் தேர்தலிலும் இடம்பெற்றது இதுதான். திருவாளர் கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சி தொடர்பில் மக்கள் வைத்திருந்த எதிர்பார்ப்புகள் அனைத்தையும் அவர்களே சீரழித்து நாட்டையும் மக்களையும் அழிவுக்குள் தள்ளிவிட்டுள்ளார்கள். நிகழ்கால ஆட்சியாளர்களால் ஏமாற்றத்திற்கு உள்ளாக்கப்பட்டு சிரமங்களுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளவர்கள் அவர்கள்மீது நம்பிக்கைவைத்த மக்கட் குழுக்களேயாவர். தமது பிரத்தியேகப் பணத்தை செலவிட்டு திருவாளர் கோட்டாபய ராஜபக்ஷவை வெற்றியீட்டச் செய்விப்பதற்காக இலங்கைக்கு வருகைதந்த வெளிநாடுகளில் பணியாற்றுகின்ற இலங்கையர்களும், ஒழுக்கமுள்ள வனப்புமிக்க தேசத்தை எதிர்பார்த்த இளைஞர் குழுக்களும், தேசிய பாதுகாப்பு பற்றி தேசப்பற்று பற்றி சிந்தித்த அனைவரும், நல்ல நாடு பற்றிக் கனவுகண்ட தொழில்வாண்மையாளர்கள், தொழில் முயற்சியாளர்கள், சுற்றாடலியலாளர்கள் மற்றும் ஒட்டுமொத்த பொது மக்களும் ராஜபக்ஷ ஆட்சியால் காட்டிக்கொடுக்கப்பட்டு விட்டார்கள்.

**எனவே இந்த அழிவுக்கு பொறுப்புக்கூற வேண்டியவர்கள் நேர்மையான நோக்கத்துடன் வாக்களித்த மக்களன்றி கபடத்தனமான நோக்கத்துடன் மக்களை ஏமாற்றி அதிகாரத்தைப் பெற்றுக்கொண்ட ஆட்சியாளர்களாவர்.**

இற்றைவரை நிலவிய மோசடி நிறைந்த, கபடம் நிறைந்த தவறான அரசியலின் இறுதிப் பெறுபேறாக அமைந்துள்ளது என்ன? நாடும் வறுமையுற்று ஆட்சியாளர்களும் அவர்களைச் சுற்றியுள்ள ஊழல்பேர்வழிகளின் வளையம் மாத்திரம் செல்வந்தர்களாக மாறியுள்ளமை அல்லவா?

இதனாலேயே இப்போது நாங்கள் ஒரு புதிய அரசியல் பயணம் பற்றிச் சிந்திக்கவேண்டும், புதிய அரசியல் பயணத்தை தெரிவுசெய்துகொள்ள வேண்டும்.

## சற்று சிந்தியுங்கள்...

## மீறப்பட்ட வாக்குறுதிகள்

கோட்டாபய ராஜபக்ஷவை முதன்மையாகக்கொண்ட நிகழ்கால ஆட்சி மக்கள் மத்தியில் பல்வேறு வாக்குறுதிகளையும் பல்வேறு எதிர்பார்ப்புக்களையும் கொடுத்தே அதிகாரத்திற்கு வந்தது. அன்று அவர்கள் என்ன கூறினார்கள்?

- **சுபிட்சத்தின் நோக்கிற்கிணங்க சுதேசத்துவத்திற்கு முதன்மைத்தானம் வழங்கி பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதாக**
- **மக்களுக்கு பெருந்தொகையான சலுகைகளையும் இளைஞர்களுக்கு தொழில்களையும் வழங்குவதாக**
- **நாட்டை விற்பனைசெய்வதை நிறுத்தி முன்னர் விற்பனை செய்திருந்த அரச ஆதனங்களை மீண்டும் கையேற்பதாக**
- **ஒரு நாடு ஒரு சட்டத்தை நிர்மாணிப்பதாக**
- **உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் தொடர்புடைய சூத்திரதாரிகளை உள்ளிட்ட அனைவருக்கும் தண்டனை வழங்குவதாகவும் பலியானவர்களுக்கு நியாயத்தை நிலைநாட்டுவதாகவும்**
- **ஒழுக்கமுள்ள நாடொன்றை உருவாக்குவதாக**
- **உறவினர்களுக்கு பதவிகள் வழங்குவதை நிறுத்தி குடும்ப ஆட்சியற்ற நாடொன்றை உருவாக்குவதாக**
- **மோசடி, ஊழல், விரயத்தை நிறுத்துவதாகவும் மத்திய வங்கி பிணைமுறி மோசடியில் ஈடுபட்டவர்களை உள்ளிட்ட ஊழல்பேர்வழிகளுக்கு தண்டனை வழங்குவதாகவும்**
- **சுற்றாடலை பாதுகாப்பதாக**
- **கல்விமான்களை முதன்மையாகக்கொண்ட விஞ்ஞானரீதியானதும் பெரியதாக அமையாததுமான அமைச்சரவை மூலமாக நாட்டை ஆட்சிசெய்வதாகவும் மரபுரீதியான அரசியல் கலாசாரத்தை மாற்றியமைப்பதாகவும்.**

2015 இல் அதிகாரத்திற்கு வந்த ரனில் - மைத்திரி ஆட்சியின் தோல்விநிலையாலும் அராஜகத்தினாலும் உருவாக்கப்பட்ட அரசியல் நிலைமையை தனக்குச் சாதகமாக்கிக்கொண்டு மரபுரீதியான அரசியல்வாதியல்லாத ஒருவர் என்றவகையில் புதிய தேசமொன்றை உருவாக்க மேற்படி வாக்குறுதிகளை அளித்து அதிகாரத்திற்கு வந்த கோட்டாபய ராஜபக்ஷவை உள்ளிட்ட ராஜபக்ஷமார்களின் ஆட்சியால் இன்றளவில் இலங்கை தள்ளிவிடப்பட்டுள்ளது கவலைக்கிடமான தலைவிதிக்கல்லவா?

## அழிவின் அளவு

இன்றளவில் எமது நாடும் மக்களும் எதிர்நோக்கியுள்ள நெருக்கடியின் அளவு அளப்பரியது. நாடு பொருளாதாரம், சமூகம், கலாசாரம் மற்றும் அரசியல் ஆகிய அனைத்துத் துறைகளிலும் சீரழிந்துவிட்டது. இதுவரை கடைப்பிடித்த தவறான பொருளாதாரக் கொள்கையும், (கொள்ளைக்கார திறந்த பொருளாதாரம்) மோசடி, ஊழல் மற்றும் விரயமும், அரசியல் போக்கிரித்தனமும், குடும்ப ஆட்சியும், ஆட்சியாளர்களின் பிடிவாதக்குணம்பொருந்திய தான்தோன்றித்தனமும் தலைக்கனம் பொருந்தியதுமான நடத்தையும், முட்டாள்த்தனமான முடிவுகளும் காரணமாக முழு நாடுமே அழிவினை நோக்கி பயணித்துக் கொண்டிருக்கின்றது. அதற்குள்ளே,

- **பொருளாதாரம் சீரழிந்து, உற்பத்தி வழிமுறைகள் பலவீனமடைந்து, நாடு கடன் பொறிக்குள் இறுகி அதிலிருந்து வெளியேற முடியாமல் தவித்துக் கொண்டிருக்கின்றது.**
- **ஏறக்குறைய 16,000 பில்லியன் ரூபா கடன் பொதியொன்றுடனேயே 2021 ஆம் ஆண்டில் எமது நாடு காலடியெடுத்து வைத்துள்ளது. தற்போது வருடமொன்றுக்கான கடன் வட்டித் தவணை 1,940 பில்லியன் ரூபாவாக அமைகையில் அரசாங்க வருமானம் 1,370 பில்லியன் ரூபா ஆகும்.**
- **வெளிநாட்டுச் சொத்துக்கள் வீழ்ச்சியடைந்தமையால் அந்நிய செலாவணி பற்றாக்குறை தோன்றியுள்ளது. அதன் விளைவாக அன்றாட வாழ்க்கையில் தாக்கமேற்படுத்துகின்ற அத்தியாவசிய பண்டங்களைக் கொண்டுவருவதற்குக்கூட பணம் இல்லாமல் உலகம் முழுவதும் பிச்சையேந்தவேண்டிய நிலையேற்பட்டுள்ளது.**
- **இதனால் கேஸ் கியூ, எண்ணெயக் கியூ, பால் மா கியூ என்றவகையில் பல்வேறு கியூவரிசைகளில் அலைந்து திரியவேண்டிய நிலை மக்களுக்கு எற்பட்டுள்ளது.**
- **எரிபொருள், கேஸ், அரிசி, கோதுமை மா, பால் மா போன்ற அனைத்து அத்தியாவசிய பண்டங்களினதும் விலை கட்டுக்கடங்காமல் அதிகரித்துள்ளது. நாட்டை கட்டுப்படுத்துவது ஒருபுறமிருக்க விலைகைளைக் கட்டுப்படுத்தக்கூட நிறைவேற்று சனாதிபதிக்கு இயலாதென்பது இப்போது நிரூபிக்கப்பட்டுவிட்டது. சந்தையில்**

பண்டங்களின் விலையைத் தீர்மானிப்பது அரசாங்கத்தின் நட்புக்குரிய தீத்தொழில் புரிகின்ற வியாபாரிகள் சிலரது கைகளிலேயே இருக்கின்றது. இதனால் பொதுமக்களே பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

-  இரசாயனப் பசளையையும் விவசாய இரசாயனங்களையும் நீண்டகாலத் திட்டமொன்று சகிதம் நிறுத்துவதை விடுத்து ஒரேயடியாக நிறுத்தியமையால் இன்று கமக்காரர்கள் பாரிய ஆபத்தினை எதிர்நோக்கி உள்ளார்கள். எதிர்காலத்தில் நாட்டில் உணவுத் தட்டுப்பாடு தோன்றக்கூடிய அபாயநேர்வு, கிராமிய பொருளாதாரம் அழிவடைந்து கமக்காரன் பிச்சையேந்தும் அபாயமொன்று தோன்றியுள்ளது. நாடு பூராவிலும் பற்றியெரிகின்ற கமக்காரர்களின் ஆர்ப்பாட்டங்கள் இந்த நெருக்கடியின் பாரதூரத்தன்மையையே எடுத்தியம்புகின்றன.
-  அதைப்போலவே நாட்டுக்கு வெளிநாட்டுச் சொத்துக்களை ஈட்டித்தந்த தேயிலை, இரப்பர், கறுவா போன்ற வணிகப் பயிர்ச்செய்கைகளும் இதனால் ஆபத்திற்கு இலக்காகி உள்ளன.
-  நாட்டின் வளங்கள் விற்பனை செய்யப்படுவதை நிறுத்துவதாகவும், விற்பனை செய்யப்பட்டவற்றை மீண்டும் கையேற்பதாகவும்கூறி அதிகாரத்திற்கு வந்த நிகழ்கால அரசாங்கம் நாட்டின் மிகவும் பெறுமதியான வளங்களை ஐக்கிய அமெரிக்காவுக்கு, இந்தியாவுக்கு, சீனாவுக்கு விற்று வருகின்றது. கொழும்புத் துறைமுகத்தின் மேற்கு முனையத்தை இந்தியாவுக்கும், துறைமுகத்தைச் சார்ந்துள்ள 13 ஏக்கர்களை சீனாவுக்கும், கெரவலபிட்டிய மின்நிலையத்தின் அதிகப்படியான பங்குகளையும் இயற்கை வாயு குழாய்த் தொகுதியையும் கேஸ் களஞ்சியத்தையும் அமெரிக்காவுக்கும் வழங்கியமை மூன்று உதாரணங்கள் மாத்திரமே.
- திருகோணமலையின் எண்ணெய்க் குதங்களும் காணிகளும், கொழும்பு நகரத்தின் மிகவும் தொன்மைவாய்ந்த கட்டிடங்களும் பெறுமதிமிக்க காணிகளும் விற்பனை செய்யப்பட ஏற்கெனவே திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. அதில் கிறேன்ட் ஒரியன்டல் ஹோட்டல், யோர்க் கட்டிடம், கபூர் கட்டிடம், வெளிநாட்டலுவல்கள் அமைச்சுக் கட்டிடம், பிரதம தபால்நிலைய கட்டிடம் உள்ளிட்ட புராதன பெறுமதிமிக்க கட்டிடங்களைக்கொண்ட காணிகளும் 13 நிறுவனங்களும் உள்ளடங்குகின்றன. இறுதியில் எமக்கு நாடொன்று எஞ்சாத நிலைமையே உருவாகியுள்ளது.
-  சட்டத்தை அனைவருக்கும் நியாயமாக ஈடேற்றுவதாகவும் ஒழுக்கமுள்ள தேசமொன்றைக் கட்டியெழுப்புவதாகவும், மோசடிகள் - ஊழல்களை நிறுத்துவதாகவும் கூறி அதிகாரத்திற்கு வந்த திருவாளர் கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சி தற்போது என்ன செய்துகொண்டிருக்கின்றது?

  தற்போது நாட்டில் சட்டமொன்று கிடையாது. நிகழ்கால அரசாங்கத்துடனும் ராஜபக்ஷ குடும்பத்துடனும் சம்பந்தப்பட்ட ஊழல்பேர்வழிகள் பலர்மீது தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்குகள் அகற்றிக்கொள்ளப்பட்டு அவர்கள் விடுதலை செய்யப்பட்டு வருகிறார்கள்.
- அதேவேளையில் அரசாங்கத்திற்கு எதிராக அபிப்பிராயங்களை தெரிவிக்கின்ற, ஆர்ப்பார்ட்டங்களை செய்கின்றவர்களை அடக்கியாள்வதையும் தொடங்கியுள்ளார்கள்.

**சனநாயகம் ஆபத்தில் வீழ்ந்துள்ளது.**

- **பொதுப்பணத்தை திருடுதல், மோசடிகள் - ஊழல்கள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன. மக்கள் கியூ வரிசைகளில் அல்லற்பட்டுக் கொண்டிருக்கையில், வயிற்றுப் பசியால் வாடுகையில், அரசாங்கத்தின் பலம்பொருந்தியவர்கள் தொடர்ச்சியாக மோசடிகள் - ஊழல்கள் மூலமாக பணத்தைச் சுருட்டிக்கொண்டு இருக்கிறார்கள்.**

  **அண்மையில் வெளியாகிய பென்டோரா ஆவணங்களில் குறிப்பிடப்பட்டிருந்தவாறு நிரூபமா ராஜபக்ஷவும் அவரது கணவனான திருநடேசனும் வைத்துள்ள அம்பலப்படுத்தப்பட்ட பணத்தொகை மாத்திரம் 3,500 கோடி ரூபாவாகும். இவை நாட்டைக் கடனாளியாக்கி மோசடிசெய்த பணமாகும்.**

- **காடுகளை அழித்து, மரங்களை வெட்டிவீழ்த்தி, சுற்றாடலை அழிப்பதும் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றது. யானைகளுக்கும் மனிதனுக்கும் இடையிலான மோதலை உக்கிரமடையச் செய்வித்து காட்டு நிலங்கள் கம்பெனிகளுக்கு கையளிக்கப்பட்டு வருகின்றன.**

- **வியத் மகவின் கல்விமான்களைக்கொண்ட விஞ்ஞானரீதியான அமைச்சரவை மூலமாக நாட்டை ஆட்சிசெய்வார்களென மக்கள் நினைத்தபோதிலும் எந்தவிதமான அறிவும் இல்லாத அதிகாரத்தால் தலைவீங்கிய ஊழல்பேர்வழிகள் கும்பலொன்றினால் நாடு நிருவகிக்கப்படுவதே உண்மையில் இடம்பெற்று வருகின்றது. இதனையல்லவா நாங்கள் மாற்றியமைத்திட வேண்டும்?**

இந்நாட்டின் அரச மற்றும் தனியார்துறையின் ஊழியர்கள், கமக்காரர்கள், மீனவர்கள், பெருந்தோட்டச் செய்கையுடன் தொடர்புபட்டவர்கள், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான உற்பத்தியாளர்களும் தொழில் முயற்சியாளர்களும், தொழில்வாண்மையாளர்கள், பெண்கள், மாணவர்கள் உள்ளிட்ட அனைத்து மக்கட் பிரிவினரும் வேதனைமேல் வேதனைகளை அனுபவித்து வருவதே இதன் இறுதி விளைவாகும். இந்த நெருக்கடிகளிலிருந்து விடுபட நாங்கள் அனைவரும் கூட்டான முயற்சியில் ஈடுபடவேண்டும்.

## எதனை மாற்றியமைக்க வேண்டும்?

இந்த நெருக்கடிக்கான தீர்வு மற்றுமொரு போக்கிரித்தனமான அரசியல்வாதிக்கு ஏமாறுவதோ அல்லது முன்னர் நாட்டை ஆட்சிசெய்து தோல்விகண்ட கட்சியை மீண்டும் அதிகாரத்திற்கு கொண்டுவருவதோ அல்ல. எனவே இற்றைவரை 73 வருடங்களாக புரிந்துவந்த தட்டுமாறி அரசியலை முடிவுக்கு கொண்டுவருவோம். மக்களை ஏமாற்ற வருகின்ற தனித்தனியான தலைவர்களுக்கு மாயாஜாலக்காரர்களுக்கு இந்த நெருக்கடியிலிருந்து மக்களையும் நாட்டையும் மீட்டெடுக்க இயலாதென்பதை விளங்கிக்கொள்வோம்.

தற்போது எம்மெதிரில் ஒரேயொரு தீர்வுதான் இருக்கின்றது. அது, இற்றைவரை கடைப்பிடித்த வங்குரோத்து அரசியல் பாதையை மாற்றியமைத்து புதிய பாதையில் காலடி எடுத்து வைப்பதாகும். உண்மையான மாற்றத்திற்காக அணிதிரள்வதாகும்.

அதிகாரப் பேராசைகொண்ட தனிப்பட்ட ஆட்களை பின்தொடர்ந்து செல்வதோ அல்லது தியசென் குமாரர்கள் வரும்வரை பார்த்துக்கொண்டிருப்பதோ அன்றி நாட்டில் ஆழமான கொள்கைரீதியான மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய உண்மையான மக்கள்நேயமுள்ள ஆட்சிக்காக அணிதிரள்வதே நெருக்கடிக்கான உண்மையான தீர்வாக அமையும். அத்தகைய ஆட்சியொன்றின் பிரதான படிமுறைகளாக அமைவன,

1. **நாட்டைக் கடனாளியாக்கிய வறுமைநிலைக்கு தள்ளிவிட்ட நிகழ்கால கொள்ளைக்கார பொருளாதார முறை, கடன்வாங்கி வயிறு வளர்க்கின்ற பொருளாதார முறையை மாற்றியமைத்து உற்பத்தியை அடிப்படையாகக்கொண்ட சொத்துக்களை ஈட்டுகின்ற பொருளாதாரமொன்றைக் கட்டியெழுப்புதல், அதன் நன்மைகள் அனைத்து மக்களுக்கும் நியாயமாக கிடைக்கத்தக்க முறையொன்றை உறுதிப்படுத்துதல்,**
2. **நாட்டில் நிலவுகின்ற மோசடியால், ஊழலால் நிரம்பிவழிகின்ற, வயிறு வளர்ப்பதை மாத்திரம் ஒரே நோக்கமாகக்கொண்ட அரசியல் கலாசாரத்தை மாற்றியமைத்து அரசியல் சிறப்புரிமைகளற்ற உண்மையான மக்கள் சேவையொன்றாக மாற்றுதல் மற்றும்,**
3. **சமூக நீதி, சட்டத்தின் சமத்துவம், தேசிய ஒற்றுமை, சனநாயகத்துடன் மனித உரிமைகளை பாதுகாக்கின்ற கூட்டுத்தன்மைகொண்ட புதிய சமூகமொன்றை நிர்மாணித்தலாகும்.**

## நாங்கள் என்ன செய்வோம்?

நிலவுகின்ற நெருக்கடி காரணமாக வேதனையையும் விரக்தியையும் அடைந்து தாய்நாட்டைவிட்டு வெளியேறுதல் அல்லது அரசியலை கைவிடுதல் எமது பொறுப்பு அல்ல. நிலவுகின்ற தோல்விகண்ட, மக்களுக்கு எதிரான ஆட்சியை மாற்றியமைத்து உண்மையாகவே வனப்புமிக்க தேசமொன்றை அழகான நாளைய தினத்தை நிர்மாணிக்க பங்களிப்புச் செய்வதாகும்.

அதன்பொருட்டு பலம்பொருந்திய மக்கள் சக்தியை விரிவான மக்கள் இயக்கத்தைக் கட்டியெழுப்புவோம். நாட்டை கட்டியெழுப்புகின்ற, நாட்டைப் பாதுகாக்கின்ற வேலைத்திட்டத்தில் நீங்களும் முனைப்பான பங்காளியாதல் வேண்டும். அதற்காக ஒன்றுசேருமாறு நாங்கள் உங்களுக்கு அழைப்பு விடுக்கிறோம்.

**அதற்காக நாங்கள் உங்கள் மத்தியில் இவ்விதமாக வந்துள்ளோம்.**
**நாங்கள் கதைப்போம், கொள்கைகள் பற்றிக் கலந்துரையாடுவோம்.**
**புதிய பாதையொன்றுக்குத் திரும்புவோம்.**
**மவிமு உடன், தேசிய மக்கள் சக்தியுடன் நம்பிக்கையாக கைகோர்த்திடுவோம். வெற்றியடையும்வரை முன்நோக்கிப் பயணிப்போம்.**

## உங்களுக்கு வெற்றி! நாட்டுக்கு வெற்றி!!

| எம்மோடு தொடர்புகொள்க | | |
|---|---|---|
| கொழும்பு | லக்ஷ்மன் நிபுன ஆரச்சி | 0773497866 |
| கம்பஹா | மகிந்த ஜயசிங்க | 0718297022 |
| களுத்துறை | நளிந்த ஜயதிஸ்ஸ | 0718100605 |
| காலி | நளின் ஹேவகே | 0712669003 |
| மாத்தறை | சுனில் ஹந்துன்னெத்தி | 0773908760 |
| அம்பாந்தோட்டை | நிஹால் கலப்பத்தி | 0718219987 |
| இரத்தினபுரி | சாந்த பத்மகுமார | 0714431483 |
| கேகாலை | எச்.பீ. தம்மிக்க | 0773436546 |
| கண்டி | லால் காந்த | 0712473104 |
| மாத்தளை | கமகெதர திசாநாயக்க | 0712391957 |
| நுவரெலியா | மஞ்சுல சுரவீர ஆரச்சி | 0717176366 |
| பதுளை | சமந்த வித்யாரத்ன | 0714479589 |
| மொனறாகலை | ஆர்.எம். ஜயவர்தன | 0718758793 |
| குருநாகல் | நாமல் கருணாரத்ன | 0718220005 |
| புத்தளம் | கயான் ஜானக்க | 0718201710 |
| அநுராதபுரம் | சுசந்த குமார | 0716540533 |
| பொலநறுவை | ரீ.பீ. சரத் | 0719178866 |
| திருகோணமலை | அருன் ஹேமசந்திர | 0773377325 |
| அம்பாறை | வசந்த பியதிஸ்ஸ | 0702170152 |
| மட்டக்களப்பு | கந்தசாமி பிரபு | 0771266464 |
| வவுனியா | உபாலி சமரசிங்க | 0779080255 |
| யாழ்ப்பாணம் | இராமலிங்கம் சந்திரசேகர் | 0777795958 |
| முல்லைத்தீவு | மருகன் மோகன் | 0770880580 |
| மன்னார் | சவேரியான் லெம்பட் | 0778935787 |
| | சமரசிங்க பண்டார | 0779436120 |
| கிளிநொச்சி | இளையதம்பி கணேசபிள்ளை | 0773594424 |
| | பிரான்சிஸ் ஜோசப் | 0779290790 |

# மக்கள் விடுதலை முன்னணி

බත්තරමුල්ල, පැලවත්ත, පන්නිපිටිය පාර, 464/20, ස්ථානයේ පදිංචි උපුල් රන්ජන් වන මා විසින් මහරගම, පිළියන්දල පාර, නුගගහ පෙදෙස 43/20, ස්ථානයේ පිහිටි නියමුවා ප්‍රකාශන ආයතනයේ මුද්‍රණය කරවන ලදී.
2021 நவெ.